www.Padasalai.Net www.TrbTnpsc.com

Ranipet DIST

# முதலாம் திருப்புதல் தேர்வு - 2023

**R**

## பன்னிரெண்டாம் வகுப்பு

**நேரம் : 3.00 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள் : 90**

பகுதி- I

**14×1=14**

I. பலவுள் தெரிக:-

1) இலக்கியத்தையும், மொழியையும் ஒரு சேர பேசுகின்ற இலக்கண நூல் ________

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்பமாதவன் குறிப்பிடுவது ________

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

3) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது ________

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

4) குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடையது ________

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

5) கூற்று: இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்
காரணம்: கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி

இ) கூற்று தவறு காரணம் தவறு ஈ) கூற்றும் சரி, காரணமும் சரி

6) பொருத்துக.

அ) ஆமந்திரிகை - 1) பட்டத்துயானை

ஆ) அரசு உவா - 2) மூங்கில்

இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம்

ஈ) கழை - 4) எடை அளவு

அ) 3, 1, 4, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 1, 2, 3, 4 ஈ) 4, 3, 2, 1

7) 'சாப விமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

8) அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது ________

அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை

இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தும்

9) ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டம் பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல் ________

அ) பௌத்தமும், தமிழும் ஆ) இசுலாமும், தமிழும்

இ) சமணமும், தமிழும் ஈ) கிறித்தவமும், தமிழும்

10) 'செம்பருதி' - இலக்கண குறிப்புத் தருக.

அ) அடுக்குத்தொடர் ஆ) வினையெச்சம் இ) பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



R

11) 'புதுப்பெயல்' - புணர்ச்சி விதி தருக.

அ) இயல்பினும், விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்

ஆ) ஈறுபோதல், இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

12) 'தலைக்குளம்' என்ற சிறுகதையின் ஆசிரியர் ________

அ) பூமணி ஆ) சாந்தாதத்

இ) ஐராவதம் மகாதேவன் ஈ) தோப்பில் முகமதுமீரான்

13) ஆராய்ந்து சொல்கிறவர் ________

அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்

14) மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

## பகுதி-II

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×2=6**

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16) நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

17) இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

18) கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4**

19) நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்தை குறிப்பிடுக.

20) அக்காலத்துக் கல்வி முறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

21) அறிவுடைய வேந்தனின் நெறிகுறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?

**இ) எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14**

22) தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

ஆ) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்

23) ஊன்-ஊண் பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க

24) ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.

அ) பெருந்தேர் ஆ) தலைக்கோல்

25) ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) அமர்ந்தான் ஆ) தொழுதனர்

26) சொல்லை பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க

அ) பலகை ஆ) தலைமை

27) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான கலைச்சொற்களை எழுதுக.

அ) Debit Card ஆ) Whats App

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



R

28) மரபுச் சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.

அ) காலங்காலமாக ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

29) வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.

நாம் தாழாமல் இருக்க தம்மை தாழ்த்தி கொண்டவர் மயிலையார்

30) பாவிகம் - விளக்குக.

## பகுதி- III

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

31) மனத்திட்டம் அவசியமான பண்பு என்பதை குறள்வழி நின்று விளக்குக.

32) யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான்

உலகமும் கெடுமே - உவமையையும், பொருளையும் பொருத்தி விளக்கு

33) 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

34) இராமலிங்க அடிகளார், கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி.** 2×4=8

35) பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் தருக.

36) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

37) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38) நேர மேலாண்மையை சீனக்கதை வாயிலாக விளக்குக.

**இ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

39) வேற்றுமை அணியை சான்றுடன் விளக்குக (அல்லது)

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது" - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40) 'பாடாண் திணையை' சான்று தந்து விளக்குக.

41) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை (அல்லது)

ஆ) தினை விதைத்தவன் தினை அறுப்பான்

42) பின்வரும் பாடலை படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி எவையேனும் மூன்று நயங்களை கண்டறிந்து எழுதுக.

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை பிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டப்பா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா! - பாரதியார்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43) தமிழாக்கம் தருக.

அ) Prevention is better than cure.

ஆ) Charity begins at home

இ) The limits of my language are the limits of my world.

ஈ) Too much of anything is good for nothing

பகுதி-IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-** **3×6=18**

44) அ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்கு துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று விளக்குக. **(அல்லது)**

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

45) அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. **(அல்லது)**

ஆ) மயிலையார் ஓர் 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க

46) அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க **(அல்லது)**

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

பகுதி-V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

47) அ) "பாதகர் குழுமி" எனத் தொடங்கும் மனப்பாட பாடலை அடிபிறழாமல் எழுது.

ஆ) "மிகும்" - என முடியும் திருக்குறளை எழுது.

********

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com